# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.1542/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | ரமேஷ் |
| Father's Name | : | த.பெ.ஆறுமுகம், சிறப்பு உதவி ஆய்வாளர். |

வடவணக்கம்பாடி காவல் நிலையம்.

| | | |
|---|---|---|
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | ˙ .54 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of **16.03.2026.**

**எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வடவணக்கம்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரி மீனாட்சி பணி மாறுதலில் சென்றுவிட்டார். அதனால் அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்ய இயலவில்லை. அவர்களது கையெழுத்து எனக்கு தெரியும். நான் கோப்புகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

1) கடந்த 15.05.2025ம் தேதி அ.சா.1னிடம் நிலை குற்ற எண்.68/2025 பி.எஸ்.ஏ பிரிவு 296(b), 115(2), 351(2) ஆகிய பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த புகார் அ.த.சா.ஆ.3 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆகும்.

2) சம்பவ சாட்சிகளாக ரமேஷ், சீனிவாசன், கணபதி, மணி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) விஜயகுமார், விநாயகம் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆகும்.

4) புலன் விசாரணையின்போது எதிரி அன்றைய தினமே கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

5) காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அஜய் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில்காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கியுள்ளதாக உள்ளது.

6) வழக்கின புலன்விசாரணை முடித்து எதிரிமீது மேற்கண்ட பிரிவுகளில் இருந்து 294(b), 324, 506(2)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி நான் அல்ல. நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். விசாரணை அதிகாரி வழக்கினை சரிவர புலன்விசாரண செய்யாமல் எதிரிக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி குற்றவாளி இல்லையென்றால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.